பக்கங்கள் 20+3

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | புரட்டாதி 14 செவ்வாய்க்கிழமை 30.09.2025 | அதிர்வு 61

## பல்கலை ஆசிரியர் சங்க சம்மேளனம் பணிப்பகிஷ்கரிப்பு

பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனம் நாடளாவிய ரீதியில் இன்று ஒரு நாள் அடையாளப் பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுத்துள்ளது.

03

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# வினைத்திறனற்ற பணிக்காக ஹந்துன்னெத்திக்கு நோபல் பரிசு வழங்க சாணக்கியன் பரிந்துரைப்பு!

## மட்டு. மாவட்ட இணைப்புக் குழுத் தலைவருக்கு சிலேடைப் பாராட்டு






மட்டக்களப்பு மாவட்ட இணைப்புக் குழுவின் தலைவர் என்ற முறையில் வினைத்திறனுடன் செயலாற்றத் தவறியமைக்காக அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்திக்கு நோபல் பரிசு வழங்கலாம் என்று மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் இன்று மட்டக்களப்பில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் சிலேடையாகத் தெரிவித்தார்.

03




# உரிமைகளைத் தர பின்னடிக்கும் அரசு

## இன்று வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்திய யாழ். பல்கலை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

(எஸ்.நிதர்ஷன்)

அநுர அரசு எமக்கான உரிமைகளைத் தரப் பின்னடிக்கின்றது என்று இன்று வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்திய யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

தமக்கான ஊதிய உயர்வு மற்றும் கடந்த காலங்களில் கிடைக்கப் பெற்று தற்போது நிறுத்தப்பட்ட சில சலுகைகளை மீள வழங்கல் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், இலங்கை பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்துடன் இணைந்து ஒரு நாள் அடையாளப் போராட்டம் ஒன்றை இன்று முன்னெடுத்தது.

03




# யாழ். விசேட பொருளாதார மத்திய நிலையம் மீள ஆரம்பம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் விசேட பொருளாதார மத்திய நிலையத்தில் மீள் ஆரம்பிப்பு நிகழ்வு மட்டுவிலில் இன்று செவ்வாய்க்கிழமை காலை கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகர் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வர்த்தக, வாணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், நாடாளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், எஸ்.ஸ்ரீபவானந்தராசா, ஜெ.றஜீவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பொருளாதார மத்திய நிலையத்தை நாடா வெட்டி திறந்து வைத்ததுடன், மொத்த விற்பனை வியாபாரத்தையும் விருந்தினர்கள் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தனர்.

சாவகச்சேரி பிரதேச சபையின் தவிசாளர், யாழ். மாவட்ட செயலர், வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர், பிரதேச செயலாளர்கள், விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

















# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## உரிமைகளை...

யாழ். பல்கலைக்கழகத்தின் பிரதான நுழைவாயிலை மறித்து முன்னெடுக்கப்பட்ட இந்த அடையாளப் போராட்டம் இன்று காலை 10.15 மணிக்குப் பல்வேறு கோஷங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியவாறு முன்னெடுக்கப்பட்டது.

இது குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த யாழ். பல்கலைக்கழகத்தின் ஆசிரியர் சங்கத் தலைவர் கலாநிதி விக்னேஸ்வரன்,

“இன்றைய அரசின் கல்வி அமைச்சர், ஜனாதிபதி உள்ளிட்டவர்களுடன் எமது பிரச்சினைகள் குறித்து பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தி, தீர்வை வழங்க அவர்கள் இணங்கிய நிலையில், தீர்வுகளை நடைமுறைபடுத்துவதில் கால தாமதம் அல்லது இழுத்தடிப்பு நிலை இருந்து வருவதால், அதற்கு எமது எதிர்ப்பை வெளிக்கொணரும் வகையிலும், தீர்வை விரைவுபடுத்தக் கோரியுமே இந்தப் போராட்டத்தை நாம் முன்னெடுக்கின்றோம்.

இந்த அரசு தற்போது கொண்டுவந்துள்ள சம்பள சீரமைப்பில் பல்கலைக்கழக ஆசிரியர்கள் கடுமையாகப் பாதிக்கப்படும் நிலை இருக்கின்றது.

அதேபோன்று கொரோனா உள்ளிட்ட பல அனர்த்தங்களால் பல்கலைக்கழகத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மாணவர் அனுமதிப்பும் அதிகரித்துள்ளதால் மாணவர்களை உரிய ஆராய்ச்சி முறையிலான கற்பித்தங்களைச் செய்வதில் பல நெருக்கடிகள் இருக்கின்றன.

மேலும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் பிள்ளைகளுக்குத் தரம் மிக்க பாடசாலைகளில் முதலாம் தரத்தில் இணைப்பதற்கான சலுகைகள் வழங்கப்பட்டு வந்தன. அதை இந்த அரசு நிறுத்தியுள்ளது.

விரிவுரையாளர்கள் பலர் வெளிநாடுகளுக்குச்சென்றுள்ளமையால்அவர்களது வெற்றிடங்களை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கையை இன்றைய அரசு எடுக்காதுள்ளதால் விரிவுரைதாளர்கள் கடும் சுமைகளுக்குளாகியுள்ளனர். அத்துடன் மாணவர்கள் கூடுதலான கற்றலை மேற்கொள்ள குறிப்பாக ஆராய்ச்சிகளை முன்னெடுக்க முடியாதிருக்கின்றது.

கல்வி மறுசீரமைப்பை இந்த அரசு முன்னெடுக்கின்றது. இந்த நடவடிக்கையின் போது உரிய ஆய்வுகளை மேற்கொள்ளாது மேற்கொள்ளப்படுகின்றது என எமது தாய்ச்சங்கம் சுட்டிக்காட்டிய போதும் அது தொடர்பில் அரசு அக்கறை கொள்ளாதிருக்கின்றது.

இவ்வாறான பல பிரச்சினைகளை நாம் எதிர்கொண்டு வரும் நிலையில் அரசுடன் பேச்சுக்களை நடத்தி தீர்வை எட்டியிருந்தோம்.

ஆனால், அந்தத் தீர்வை நடைமுறைப்படுத்த அரசு பின்னடிக்கின்ற நிலை காணப்படுகின்றது.

இந்நிலையில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வை விரைவுபடுத்தும் நோக்கிலேயே இந்த ஒரு நாள் அடையாளப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

எனவே, நாட்டின் முதுகெலும்பான பல்கலைக்கழகக் கட்டமைப்பை வலுப்படுத்த அரசு நடவடிக்கை எடுப்பது அவசியம்.” – என்றார்.












## வினைத்திறனற்ற...

ஆளும் தரப்பினர் மாறி மாறி கேள்வி எழுப்பி நேரத்தை இழுத்தடித்த பின்னணியில் சாணக்கியன் எம்.பி. இவ்வாறு குறிப்பிட்டார்.

“மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைளைக் காட்ட வேண்டியவர்கள் நீங்கள்தான். மறுபுறத்தில் நாங்கள்தான் கேள்வி கேட்க வேண்டும். பிரதேச இணைப்புக் குழுவின் தலைவர்கள் நீங்கள்தான். மாவட்ட இணைப்புக் குழுவின் தலைவர்களும் நீங்கள்தான். அமைச்சர்களும் நீங்கள்தான். ஜனாதிபதியும் நீங்கள்தான். பிரதமரும் நீங்கள்தான். ஆளுநரும் உங்களுடையவர்தான். ஆக, நாங்கள்தான் உங்களிடம் கேள்வி கேட்க வேண்டும்.

பிரதேச இணைப்புக் குழு கூட்டம் நடத்துகின்றீர்கள். மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டம் நடத்துகின்றீர்கள். இந்தக் கூட்டங்களில் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த நாங்கள்தான் கேள்வி கேட்க வேண்டும். என்ன செய்திருக்கின்றீர்கள் என்று நாங்கள்தான் வினா எழுப்ப வேண்டும். ஆனால் நீங்கள் உங்களுக்குள் கேள்வி கேட்பது என்றால் இத்தகைய கூட்டத்துக்கு முன்னர் முற்கூட்டம் ஒன்றை உங்களுக்குள் தனியாக நடத்தி உங்களுக்குள் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொண்டு இங்கு வாருங்கள். இங்கு வந்து முன்னேற்றங்களைப் பற்றிப் பேசுங்கள். பயனின்றி நேரத்தை வீணடிக்க வேண்டாம்.” – இப்படிச் சீற்றத்துடன் இன்றைய கூட்டத்தில் குறிப்பிட்டார் சாணக்கியன் எம்.பி.

## பல்கலை ஆசிரியர்...

பல்கலைக்கழக கட்டமைப்பில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளதாகக் கூறிப் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளோம் என்று அந்தச் சங்கம் அறிவித்துள்ளது.

அதன் செயலாளர் சிரேஷ்ட விரிவுரையாளர் சாருதத்த இளங்கசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசு ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் கடந்துள்ள போதிலும் அரச பல்கலைக் கழகங்களில் உள்ள நெருக்கடிகளுக்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை என்று கூறியுள்ள அவர், தற்போது அரச கல்வி வீழ்ச்சியடைந்து கடுமையான நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகப் பேராசிரியர்களுக்குத் தற்போது கடுமையான பற்றாக்குறை நிலவுகின்றது என்றும், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இருந்து கடந்த ஆண்டில் மட்டும் சுமார் 200 பேராசிரியர்கள் வெளியேறியுள்ளனர் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.



# இந்தியாவில் 3 இலங்கையர்கள் கைது!

குற்றங்களில் ஈடுபட்டனர் எனக் கூறப்படும் மூன்று இலங்கையர்கள் பெங்களூர் மத்திய குற்றப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்திய ஊடகங்கள் இது குறித்து வெளியிட்டுள்ள செய்தியில், மூன்று இலங்கையர்களும் பெங்களூரில் உள்ள தேவனஹள்ளி அருகே உள்ள ஒரு அடுக்குமாடிக் குடியிருப்பில் சட்ட விரோதமாகத் தங்கியிருந்தனர் எனக் கூறப்படுகின்றது.

இந்த மூன்று இலங்கையர்களும் பல மாதங்களாக நகரில் பதுங்கி இருந்துள்ளனர் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

29, 31 மற்றும் 41 வயதுடைய குற்றம் சாட்டப்பட்டவர்கள் தொந்துறை, இரத்மலானை மற்றும் கொட்டாஞ்சேனை பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மூவரும் 2024 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இருந்து தமிழ்நாட்டின் இராமேஸ்வரத்தின் ஊடாகச் சட்டவிரோதமாக இந்தியாவுக்குள் நுழைந்துள்ளனர் எனவும், பின்னர் சென்னை மற்றும் கோயம்புத்தூரில் சிறிது காலம் தங்கியிருந்து பெங்களூருக்குச் சென்றுள்ளனர் எனவும் விசாரணையில் தெரியவந்துள்ளது. அவர்களில் எவருக்கும் கடவுச்சீட்டு உள்ளிட்ட செல்லுபடியாகும் ஆவணங்கள் இல்லை.

கைது செய்யப்பட்ட நபர்களில் ஒருவர் போதைப்பொருள் கடத்தல் வழக்கில் தேடப்பட்டு வருபவர் என்றும், மற்றொருவர் இலங்கையில் கொலை மற்றும் பிற குற்றங்கள் குறித்து சந்தேகிக்கப்படுபவர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்களை விரைவில் இலங்கைக்குக் கொண்டுவர இலங்கை உயர் ஸ்தானிகராலயம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது எனத் தெரியவருகின்றது.

# சஷீந்திர ராஜபக்ஷவுக்கு விளக்கமறியல் நீடிப்பு!

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷவை எதிர்வரும் ஒக்டோபர் 14ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



சந்தேகநபர் இன்று நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே கொழும்பு பிரதான நீதிவான் அசங்க எஸ். போதரகம இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டு மே மாதம் 9 ஆம் திககி நடந்த போராட்டத்தின் போது, சஷீந்திர ராஜபக்ஷவுக்குச் சொந்தமானதாகக் கூறப்படும் இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான, கிரிஇப்பன்வெவ, செவனகலவில் உள்ள காணியொன்றில் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டடம் உள்ளிட்ட சொத்துக்கள் சேதமடைந்தன.

அந்தச் சொத்துக்கான இழப்பீடு நிராகரிக்கப்பட்டிருந்த நிலையில், அதனை மீறி இழப்பீட்டுக்கான அலுவலகத்தின் சில அதிகாரிகளுக்கு தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி அழுத்தம் கொடுத்து இழப்பீட்டைச் செலுத்துமாறு பலவந்தப்படுத்தியுள்ளதாக அவர் அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதன்போது 88 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை இழப்பீடாகப் பெற்றதன் ஊடாக ஊழல் முறைகேடு தொடர்பில் பொதுச் சொத்துச் சட்டத்தின் கீழ் குற்றம் செய்துள்ளதாகச் சந்தேகத்தின் பேரில் அவர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# யாழ் போதனா வைத்தியசாலைக் கழிவுகள் கோப்பாய் விவசாய நிலப் பகுதியில் எரிப்பு

## மக்கள் மத்தியில் கடும் விசனம்






(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையின் பிளாஸ்ரிக் கழிவுகள் நேற்று 29 ஆம் திகதி கோப்பாய் நன்னீர் திட்ட விவசாய நிலங்களுக்கு அருகாமையில் கொட்டி தீ வைத்து எரியூட்டப்பட்டுள்ளன.

இந்தச் நடவடிக்கைக்கு அந்தப் பிரதேச மக்கள் மத்தியில் கடும் விசனம் தெரி விக்கப்படுகின்றது.

வைத்தியசாலையின் பாவனை யில் இருந்து கைவிடப்பட்ட பெருமளவு பிளாஸ்ரிக்மெத்தைகள் வலி கிழக்கு பிரதேச சபையின் எல்லையில், கோப் பாய் – கைதடி வீதியில், கந்தன்காடு இந்து மயானத்திற்கு எதிரே உள்ள குளக் கட்டின் பாதுகாப்பிற்காக நாட்டப்பட்ட புல் தரை யில் கொட்டப்பட்டு தீயிடப்பட்டுள்ளன.

போதனா வைத்தியசாலையின் வாகனத்தில் ஏற்றிவரப்பட்டு, சுகாதாரம் மற்றும் இயற்கை பாதுகாப்பிற்கு விரோத மாக மேற்கொள்ளப்பட்ட இச்செயலை வலி கிழக்கு பிரதேச சபை

ஊழியர்கள் தடுக்கும் முயற்சி மேற் கொண்டிருந்த போதிலும், சம்பந்தப்பட் டோர் "நீதிமன்ற உத்தரவின் பேரில் எரிக்கின்றோம்" எனப் பொய்யுரைத் துக்கொண்டு கழிவுகளை எரித்துவிட்டு இடத்தை விட்டுச் சென்றுள்ளனர் என பிரதேச சபையின் தவிசாளர் நிரோஷ் தெரிவித்தார்.

இது தொடர்பில் போதனா வைத்திய சாலையின் பணிப்பாளர் ரி.சத்தியமூர்த்தி யைத் தொடர்புகொண்டு கேட்டபோது –

இந்த விடயம் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் யமுனானந்தாவின் கட் டுப்பாட்டில் இருப்பதனால் அவரைத் தொடர்புகொள்ளுமாறு பதிலளித்தார்.

இதனையடுத்து போதனா வைத்திய சாலையின் பிரதிப் பணிப்பாளர் மருத் துவர் யமுனானந்தாவைத் தொடர்பு கொண்டு கேட்டபோது –

யாழ்ப்பாணம் மாநகர சபை எல் லைப் பகுதிக்கு வெளியே மக்கள் வசி யாத பகுதியில் எரியூட்டுமாறு நீதிமன்ற அனுமதி உண்டு, அதன் அடிப்படை யிலேயே அங்கே தீயிடப்பட்டது எனப் பதிலளித்தார்.

# தலாவ வாகன விபத்தில் படுகாயமடைந்த ஐந்தாவது முல்லை இளைஞனும் மரணம்




(பா.சதீசன்)

குருநாகல் – அநுராதபுரம் பிரதான வீதியின் தலாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஆடைத் தொழிற்சாலை வான் ஒன்றும், லொறியொன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகிய சம்பவம் ஒன்று கடந்த 25 ஆம் திகதியன்று இடம்பெற்றிருந்தது.

இந்த விபத்தில் முல்லைத்தீவு புதுக்குடி யிருப்பு, செம்மலை பகுதிகளை சேர்ந்த வர்களான – புதுக்குடியிருப்பு தனியார் ஆடைத்தொழில்சாலையின் – ஊழியர் கள் 4 பேர் உயிரிழந்திருந்தனர்.

இந்த விபத்தில் காயமடைந்து அநுராத புரம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் முல்லைத்தீவு புதுக்குடி யிருப்பைச் சேர்ந்த இளைஞன் நேற் றையதினம் சிகிச்சை பலனின்றி உயிரி ழந்துள்ளார்.

9ஆம் வட்டாரம், மல்லிகைத்தீவு, புதுக் குடியிருப்பைச் சேர்ந்த நடராசா விஷ்ணு யன் என்ற 21 வயது இளைஞனே உயிரி ழந்துள்ளார்.

இந்த விபத்தில் முல்லைத்தீவு மாவட் டத்தினை சேர்ந்த 5 இளைஞர்கள் உயிரி ழந்துள்ளமை குறிப்பிடதக்கது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அமெ. அவதானிப்பு அறிக்கை

தேசிய மக்கள் சக்தி தரப்பு, தான் ஆட்சிக்கு வந்ததும் நாட்டின் ஆட்சி நிர்வாகத்தில் இதுவரை இடம்பெற்று வந்த ஊழல், மோசடி, முறைகேடுகள் எல்லாம் முடிவுக்கு வந்துவிட்டன என்று ஆரவாரம் பண்ணியது. அப்படித்தான் மக்களுக்கும் இப்போது படம் காட்டப்படுகின்றது.

ஆனால் இலங்கை தொடர்பான அமெரிக்க தகவல் அறிக்கை ஒன்று நிலைமை அப்படி அல்ல என்பதை உறுதிப்படுத்தி இருக்கின்றது.

இலங்கையில் வெளிநாட்டு முதலீட்டுக் கொள்கைகளை செயல்படுத்துவதில் நிலைத்தன்மை இல்லை எனவும், நிறுவன ஊழல் தொடர்ந்து நிலவுவதாகவும் அமெரிக்க வெளியுறவுத்துறை தனது 2025 முதலீட்டு சூழல் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

புதிய நிர்வாகத்தின் கீழ் உயர் மட்ட அரசியல் லஞ்சக் கோரிக்கைகள் குறைந்துள்ளன என்றாலும், சலுகை பெற்ற குழுக்களால் பாதுகாக்கப்படும் துறைகளில் ஊழல் நீடிக்கிறது எனவும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

தேவையற்ற விதிமுறைகள், சட்ட நிச்சயமின்மை, அதிகாரிகளின் பலவீனங்கள் என்பன முதலீட்டாளர்களுக்கு சவாலாக உள்ளன என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், அரசாங்கம் முன்னைய ஒப்பந்தங்களை மீண்டும் பேச்சுவார்த்தைக்கு உட்படுத்தியமையால், அதானி நிறுவனம் வட மாகாணத்தில் திட்டமிட்டிருந்த 400 மில்லியன் அமெரிக்க டொலர் (சுமார் பன்னீராயிரம் கோடி ரூபா) மதிப்பிலான எரிசக்தி திட்டத்தை கைவிட்டதாகவும் அறிக்கை கூறுகிறது.

அதேவேளை, தனியார் துறை தலைமையிலான பொருளாதாரத்தை சிலர் விமர்சிப்பதோடு, அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களை ஊக்குவிக்கும் போக்கையும் அமெரிக்க வெளியுறவுத்துறை தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்காவின் புதிய அதிபர் டொனால்ட் டிரம்ப், சர்வதேச ரீதியில் பொருளாதார விவகாரங்கள் தொடர்பில் எடுத்து வரும் குசும்புத்தனமான நடவடிக்கைகள் காரணமாக அமெரிக்காவின் பொருளாதார நிலைப்பாடுகள் பற்றிய அறிவிப்புகள், கொள்கைப்போக்குகள், பிரகடனங்கள் போன்றவை சர்வதேச ரீதியில் ஏளனத்துக்கு உள்ளாகி இருக்கின்றன என்பது உண்மைதான்.

ஆயினும், அமெரிக்கக் கட்டமைப்பினுடைய சர்வதேச அவதானிப்புக்கள் சம்பந்தமான அறிக்கைகள், பொருளாதாரப் பிரகடனங்கள் போன்றவை இத்தகைய ஏளனப் பார்வையில் பார்க்கத் தக்கவை அல்ல. அவை, காலம் காலமாக அமெரிக்கத் தரப்பினுடைய சர்வதேச அவதானிப்புகள் ஊடாக வருகின்ற தரமான கண்காணிப்பு பிரகடனங்களாகவே நோக்கப்பட வேண்டும்.

எனவே இலங்கையின் பொருளாதார அணுகுமுறை தொடர்பான அமெரிக்காவின் இந்த அறிவிப்பை ட்ரம்பினுடைய கோமாளித்தனமான அறிக்கைகளில் ஒன்றாகப் பார்த்து உதாசீனப்படுத்திவிட முடியாது. இது சர்வதேச ரீதியில் பொருளாதார விடயங்களை அவதானிக்கும் அமெரிக்க வல்லரசுக் கட்டமைப்பின் பார்வையில் வெளியிடப்பட்ட ஒரு கண்காணிப்பு அறிக்கையே.

இதில் கூறப்பட்டுள்ள விடயங்களைக் கவனத்தில் எடுத்து தன்னுடைய பொருளாதாரப் போக்கையும் அணுகுமுறையையும் இலங்கை நேர்சீர்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது நாட்டையும் அரசையும் திருத்திக் கொள்ள ஒரு நல்ல வழியாக இருக்கும்.



# தலைமுறைகளை இணைக்கும் பாலங்கள்

## சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தினம்

**நாளை ஒக்டோபர் முதலாம் திகதி சர்வதேச சிறுவர் தினம் மற்றும் முதியோர் தினம் கொண்டாடப்படுகின்றது. அதை ஒட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.**



சௌந்தராஜன் துர்ஷாயினி
(மூன்றாம் வருடம், ஊடகத்துறை,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)

இன்றைய உலகில் முக்கிய பங்குதாரர்களாக பெரும்பங்கு வகிப்பவர்கள் சிறுவர்கள் மற்றும் முதியோர்கள் ஆவர். அந்த வகையில் அவர்களின் சிறப்பினை எடுத்துக்காட்டும் முகமாக சர்வதேச சிறுவர் தினம் மற்றும் முதியோர் தினம் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி கொண்டாடப்படுகின்றது. உலக அளவில் சிறுவர்கள் எதிர்நோக்கும் அநீதிகளையும் துஷ்பிரயோகங்களையும் குறைத்து, அவர்களின் உரிமைகளை உறுதி செய்வதற்காக சர்வதேச சிறுவர் தினம் கொண்டாடப்படுவதுடன், உலக அளவில் காணப்படும் முதியவர்களின் வகிபங்கையும் அவர்களின் முக்கியத்துவத்தையும் உணர்த்தி வயது வேறுபாடு இன்றி அவர்களுக்கான கவனிப்பை வழங்குவதற்காக சர்வதேச முதியோர் தினமும் கொண்டாடப்படுகின்றது.

ஒரு தலைமுறையினரின் முக்கியத்துவத்தையும் அவர்களுக்கு சமூகத்தின் பங்களிப்பையும் எடுத்துக்காட்டும் முகமாகவே இவ்விரண்டு நிகழ்வுகளும் ஒரே தினத்தில் கொண்டாடப்படுகின்றன. எனவே நாம் இவ்விரண்டு நிகழ்வுகளையும் வெவ்வேறாக ஆராயலாம்.

### இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்

'இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்' என்னும் அடிப்படையில் சிறுவர்களுக்கு இடையே புரிந்துணர்வையும், பொது நிலைப்பாட்டையும் ஏற்படுத்துவதை நோக்காக கொண்டு 14.12.1954 அன்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபை கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட யோசனைக்கு அமைய ஒக்டோபர் முதலாம் திகதி உலக சிறுவர் தினம் பிரகடனப்படுத்தப்பட்டது. சிறுவர் தினத்தை முன்னிட்டு செப்டம்பர் 25 – ஒக்டோபர் 01 வரை 'சிறுவர் தின தேசிய வாரம்' பிரகடனப்படுத்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. இலங்கை உள்ளிட்ட அதிகமான நாடுகள் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி 'உலக சிறுவர் தினம்' கொண்டாடப்படுகின்றது. இவ்வாண்டு "அன்புடன் காப்போம் – உலகை வெல்வோம்" எனும் தொனிப்பொருளின் கீழ் சிறுவர் தொடர்பாக இயங்குகின்ற அனைத்து நிறுவனங்களும் இணைந்து மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் நெறிப்படுத்தலில், நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் உலக சிறுவர் தின நிகழ்ச்சித்திட்டக் கோவையை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

உலக சிறுவர் தின தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணையாக 2025 செப்டெம்பர் 25ஆம் திகதி தொடக்கம் 2025 ஒக்டோபர் முதலாம் திகதி வரை பிரதான தேசிய வைபவம் உள்ளிட்ட செயற்பாட்டுத்திட்டம் "சிறுவர் தின தேசிய வாரம் – 2025" எனப் பிரகடனப்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. எனவே 18 வயதிற்கு உட்பட்டவர்கள் அனைவரும் சிறுவர்களாக கருதப்பட்டு கொண்டாடப்பட்டு வருகின்றார்கள்.

இன்றைய உலகம் எதிர்நோக்கும் மிக முக்கிய சமூகப் பிரச்சினைகளில் ஒன்றாக சிறுவர் மீதான துஷ்பிரயோகம் விளங்குகின்றது. சிறுவர் துஷ்பிரயோகம் வளர்ச்சி அடைந்த மற்றும் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகள் என்ற எந்தவித வேறுபாடுகளும் இன்றி உலகம் முழுவதும் காணப்படும் சர்வதேச கவனத்தை ஈர்த்த பிரச்சினையாக காணப்படுகின்றது. சிறுவர்கள் என்போர்

தொடர்ச்சி▼

# தலைமுறைகளை இணைக்கும் பாலங்கள்

## சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தினம்

தொடர்ச்சி▲

மனித சமூகத்தின் மிக முக்கிய பகுதியினராக கருதப்படுகின்றனர். அத்தோடு அவர்கள் அடுத்த வர்களில் தங்கி வாழ்கின்ற பலவீனமானவர்களாக காணப்படுவதனாலயே அவர்களது உரிமைகள் அதிகம் மீறப்படுகின்றன.

இதே வேளை ஒவ்வொரு ஆண்டும் உலகில் உள்ள சிறுவர்களில் 16,000 பேர் மரணிக்கின் றனர். பத்து தொடக்கம் 19 வயதுக்கு இடைப்பட்ட இரண்டு மில்லியன் பேர் வரையில் எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளாவதுடன் அவர்களில் 56 சத வீதத்தினர் சிறுமிகளாக உள்ளனர். மரணிக் கின்ற ஐந்து வயதுக்கு உட்பட்ட சிறுவர்களில் 50 சதவீதமானோர் போசாக்கின்மையால் மரணிக் கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. உலகம் முழுவதும் இடம்பெறுகின்ற வன்முறைகள் மற்றும் பாலியல் ரீதியிலான துன்புறுத்தல்கள் காரணமாக பெரும் எண்ணிக்கையிலான சிறுவர்கள் பாதிக் கப்படுகின்றனர். மறுபுறத்தில் போட்டித் தன்மை வாய்ந்த கல்வியின் பிடியில் குழந்தை பருவம் சிக்கியுள்ளத்துடன் இன்னொரு புறத்தில் நவீன தொலைத்தொடர்பு சாதனங்களின் ஆபாச மற்றும் கொடூர காட்சிகளைக் கொண்ட சினிமாபோதை மற்றும் புகைத்தல் ஏனைய சமூக காரணிகள் காரணமாக சிறுவர்கள் பல்வேறு பாதிப்புகளையும் சவால்களையும் எதிர்நோக்குகின்றனர்.

### நம் சமூகத்தில் முதியோர்கள்

மேலும் நமது சமூகத்தில் பெரும்பான்மையான வகிபாகத்தை கொண்டவர்கள் முதியோர்கள் ஆவர். 1991 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் சபையின் அறிவுறுத்தலின்படி அனைத்து முதியோர்களுக் கும் உணவு, உடை, இருப்பிடம், வாழ்வதற்கான நல்ல சூழல், சமூகத்திற்கு சேவை புரியும் வாய்ப்பு போன்றவை ஏற்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டாலும் இன்றைய உலகில் முதி யோர்கள் பெரும் பாதிப்பை எதிர்கொள்கின்றனர்.

2025 ஆம் ஆண்டு சர்வதேச முதியோர் தினத்திற்கான அதிகாரப்பூர்வ கருப்பொருள் ‘முதி யோருக்கு அதிகாரம் அளித்தல்“ (Empowering Elderly) ஆகும். இது முதியவர்களின் பங்க ளிப்புகளை கௌரவிப்பதையும், அவர்களின் உரிமைகள் மற்றும் தேவைகள் குறித்த விழிப் புணர்வை ஏற்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.



முதியவர்களை அவர்களின் இயலாமையின் போது சரியாக கவனிக்காமைஇ சுகாதார வசதி களை ஏற்படுத்திக் கொடுக்காமை, அவர்களை தனிமைப்படுத்தி வைத்திருத்தல், அவர்களின் கருத்துக்களுக்கு செவி சாய்க்காமை, துன் புறுத்தல்கள், வார்த்தைகளால் காயப்படுத்தல் போன்ற செயற்பாடுகள் முதியவர்களை மிகவும் பாதிக்கின்ற விடயங்களாக அமைகின்றன.

“காவோலை விழ குருத்தோலை சிரிக்கும்“ என்ற பழமொழியை போல நாம் எம்முடைய வீட்டில் தொலைத்தொடர்பு சாதனங்களுடன் செலவிடும் நேரத்தை குறைத்து சிறிய நேரத்தையாவது ஒதுக்கி முதியவர்களுடன் உறவாட வேண்டும் அவை அவர்களுக்கு ஆறுதலாக இருப்பது மட்டுமல்லாது அவை எமது எதிர்காலத்திற்கு உதவியாக அமையும்.

எனவே எமது சமூகத்தில் சிறுவர்கள் மட்டுமல லாமல் சிறுவர்களைப் போலவே குழந்தை மனம் கொண்ட முதியவர்களையும் நேசித்து அவர்களது எதிர்காலத்தை வளம் பெறச் செய்வது ஒவ்வொரு பிரஜையினதும் பொறுப்பு என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும். உலக சிறுவர் மற்றும் முதியோர் தினத்தை கொண்டாடும் இந்நாளில் சிறுவர் உலகினை பாதுகாப்பதற்காக அர்ப் பணிப்புடன் செயற்படவும்இவயதான முதியோ ருக்கு கிடைக்க வேண்டிய அன்பு, மரியாதை, அதிகாரத்தையும் ஒவ்வொரு தனிப்பட்ட நபர்களும் மேற்கொள்வார்களாக இருந்தால் அதுவே இந்த சிறுவர் மற்றும் முதியோர் தினத்தின் மாபெரும் வெற்றியாக அமையும்.



# சர்வதேச சிறுவர், முதியோர் தின விழா சம்மாந்துறையில் நாளை!

(வி.ரி.சகாதேவராஜா)

சம்மாந்துறை ஓய்வூதியர் நலன்புரி சமூக சேவை சபையின் சர்வதேச முதியோர் சிறுவர் தின கொண்டாட்ட விழா நாளை (01) புதன்கிழமை சம்மாந்துறை மல்கம்பிட்டி பள்ளிவாசல் முன்றலில் நடைபெறவுள்ளது.

ஓய்வூதிய சபையின் தலைவரும் சம்மாந்துறை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருமான ஐ.எம். இப்ராஹிம் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது .

90 வயதுக்கு மேற்பட்ட மூன்று வயோதிபர்கள் மற்றும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற ஓய்வூதியர்களின் நான்கு பேரப்பிள்ளைகள் பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளனர்.




# முஸ்லிம் மாணவிகளின் ஆடை தொடர்பில் பிரதமரின் தீர்மானம் வரவேற்கத்தக்கது

## பெண்கள் அமைப்பின் தலைவி நிகாஸா ஷர்பீன் தெரிவிப்பு





(நூருல் ஹுதா உமர் )

முஸ்லிம் மாணவிகள் தங்களது கலாச்சார ஆடையுடன் நாட்டின் எப்பாடசாலையிலும் கல்வி கற்க முடியும் என பிரதமர் ஹரினி அபயசூரிய எடுத்துள்ள தீர்மானம் வரவேற்கத்தக்கது என்று வுமென்ஸ் கோப்ஸ் ஸ்ரீ லங்கா (Women's Corps - Sri Lanka) அமைப்பின் தலைவி நிகாஸா ஷர்பீன் பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ள நன்றி சொல்லும் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அண்மையில் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் மேற்குறித்த இத்தீர்மானம் எடுக்கப்பட்டதானது இன ரீதியாக சிந்திப்பவர்களுக்கு பலத்த அடியாகும் என்பதோடு முஸ்லிம் மாணவிகள் மற்றும் தாய்மார்கள் மத்தியில் இந்த அரசின் மீதான நன்மதிப்பையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்தத் தீர்மானத்துக்காக தங்களுக்கு இந்த நாட்டின் முஸ்லிம் மாணவிகள் மற்றும் பெண்கள் சார்பாக நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முஸ்லிம் மாணவிகளின் ஆடை தொடர்பில் சட்டங்கள் இருந்தாலும் கடந்த காலங்களில் பல்வேறான அசௌகரியங்களை பரீட்சைகளின் போதும் கல்வி கற்றலின் போதும் இம்மாணவிகள் எதிர்நோக்கி வந்தமையை நாம் மறந்து விட முடியாது.

சில சமூகம் சார்ந்த மற்றும் நாட்டின் நன்மை கருதி தங்களால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை பார்க்கும் போது மக்கள் மத்தியில் நல்லதொரு அபிப்பிராயம் தங்கள் மீது தோன்றியிருப்பதை நாம் அவதானிக்க முடிகின்றது.- என்றுள்ளது.

# தேக்கு மரக்குற்றிகளை சட்ட விரோதமாக ஏற்றிச் சென்ற சந்தேக நபர் கைதானார்!







(பாறுக் ஷிஹான்)

பல்லாயிரம் ரூபா பெறுமதியுள்ள தேக்கு மரக்குற்றிகளைச் சட்ட விரோதமாக ஏற்றிச் சென்ற சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டபிள்யூ.ஏ.என்.நிசாந்த பிரதிப்குமாரவுக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் இவ்வாறு இந்தத் தேக்கு மரக்குற்றிகள் மீட்கப்பட்டுள்ளன.

சம்மாந்துறை பொலிஸார் வங்களாவடி பிரதேசத்தில் நேற்று திங்கட்கிழமை (29) சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். சம்மாந்துறை விளினியடி 02 பகுதியைச் சேர்ந்த 49 வயதுடையவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது நடவடிக்கையானது கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே.இப்னு அசாரின் நெறிப்படுத்தலில் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினர் முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடத்தப்பட்ட மரக்குற்றிகளுடன் சந்தேக நபரைச் சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த சம்மாந்துறை பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.





# பிரான்ஸில் திலீபன் நினைவும் சரஸ்வதி பூஜை வழிபாடுகளும்

சுவிஸ் எல்லைகளை அருகில் கொண்டமைந்த பிரான்சின் புற நகர் முலூஸ் நகரில் பிராங்கோ தமிழ்ச் சங்கம், முலூஸ் தமிழ்ச்சோலைப் பள்ளியில் தியாக தீபம் திலீபனின் 38 ஆம் ஆண்டு நினைவு வணக்க நிகழ்வை நடத்தியது. கலைமகள் வழிபாடும் சிறப்பாக இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் பெற்றோர், மாணவர்கள், நலன்விரும்பிகள் கலந்துகொண்டனர்.






# தியாக தீபம் திலீபனின் 38ஆவது ஆண்டில் கிரிக்கெட் மற்றும் கால்பந்தாட்டப் போட்டிகள்!

(வாலகிருஸ்ணா)

தியாக தீபம் திலீபனின் 38 ஆவது நினைவு தின இறுதி நாள் நிகழ்வு மட்டக்களப்பு வாகரைப் பிரதேசத்தில் உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

இந்த நிகழ்வு இலக்கியா தென்றல் அமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் ரி.நிதர்சன் தலைமையிலும் ஏற்பாட்டிலும் நடைபெற்றது. இந்த நிகழ்வில் மாவீரர் ஒருவரின் தாயாரால் பொதுச் சுடர் ஏற்றப்பட்டது.

தொடர்ந்து நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் ஈகைச் சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தி மௌன இறைவணக்கம் செலுத்தினர்.

நிகழ்வில் கலந்து கொண்ட யுத்த காலத்தில் உயிர் நீர்த்த மாவீரர்களின் தாய்மார்கள், வாகரை பிரதேசத்தைச் சேர்ந்த முன்னாள் போராளிகள் ஆகியோர்கள் நினைவுப் பேருரை நிகழ்த்தினர்.

இலக்கியா தென்றல் அமைப்பின் அனுசரணையுடன் வாகரை பிரதேசத்தில் 38 ஆம் ஆண்டு நினைவு எழுச்சி நிகழ்வாக இளைஞர்களுக்குக் கிரிக்கெட் மற்றும் கால்பந்தாட்ட விளையாட்டுப் போட்டிகள் பிரதேச மட்ட அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்டு வெற்றி பெற்ற அணிகளுக்கு கிண்ணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.









# முப்பது வருட கால யுத்தத்தில் தமிழருக்கு எஞ்சியது கல்வி மட்டுமே

## நாவிதன்வெளி தவிசாளர் ரூபசாந்தன்





**( வி.ரி.சகாதேவராஜா)**

முப்பது வருட கால யுத்தத்தில் தமிழர்களுக்கு எஞ்சியது கல்வி மாத்திரமே என்று நாவிதன்வெளி பிரதேச சபைத் தவிசாளர் இ.ரூபசாந்தன் தெரிவித்தார்.

நாவிதன்வெளி பிரதேச சபை தவிசாளரும் இந்திரன் பௌண்டேசன் தலைமை ஒருங்கிணைப்பாளருமான இ.ரூபசாந்தனின் சிந்தனையின் செயற்பாடாய் உயர்தர பரீட்சைக்கு தோற்ற இருக்கும் மாணவர்களுக்கான நாடகமும் அரங்கியலும் பாடத்துக்கான மாதிரி வினாத்தாள் தெளிவூட்டல் செயலமர்வு இன்று (30) செவ்வாய்க்கிழமை நாவிதன்வெளி வேப்பயடி கலைமகள் வித்தியாலயத்தில் அதிபர் கே.தியாகராஜா தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வை ஆரம்பித்து வைத்த தவிசாளர் மேலும் பேசுகையில்,

எம் தமிழினம் முப்பது வருட கால யுத்தத்தைச் சந்தித்து, உடமைகள், உயிர்கள் பலவற்றை இழந்து ஏதிலிகளாகப் பல நாடுகளில் வாழ்ந்தாலும் உலக அரங்கிலோ எம் நாட்டிலோ எம்மவர்கள் இழக்காத சொத்து கல்வி மாத்திரமே. ஆகவே நாம் எதை இழந்தாலும் கல்வியின் பயனால் அனைத்தையும் தேடிக் கொள்ள முடியும்.

இந்த நாவிதன்வெளி பிரதேசத்துக்கு மாத்திரமல்ல எனைய பகுதிகளுக்கும் கல்விக்கு நான் சேவை செய்ய ஒரு போதும் தயங்கியதில்லை. கல்வி கற்ற இளம் சமூகத்தை உருவாக்குவதன் மூலமே நாம் தனி மனித ஒழுக்கம், பொருளாதாரம் என்பவற்றை வளர்த்து முன்னேற்றம் அடைந்த சமூகத்தை உருவாக்கலாம் .- எனத் தெரிவித்தார்.

இந்த மாதிரி வினாத்தாள் தெளிவூட்டல் செயலமர்வு வளவாளர் வி. தயாநிதி ஆசிரியரால் நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் கலைமகள் வித்தியாலய அதிபர் கே.தியாகராஜா ஆசிரியர்கள், பரீட்சைக்கு தோற்றவிருக்கும் நாவிதன்வெளி கோட்ட மாணவர்களும் கலந்து கொண்டனர்.

# சைவப்புலவர் மற்றும் இளஞ்சைவப்புலவர் பட்டத் தேர்வுகளில் 2025இன் பெறுபேறுகள்

**(த.சுபேசன்)**

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தால் 2025 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட சைவப்புலவர் மற்றும் இளஞ்சைவப்புலவர் பட்டத்தேர்வுகளில் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

சைவப்புலவர் தேர்வில் திருமதி செல்வநாயகி தெய்வேந்திரமூர்த்தி (கிளிநொச்சி), திருமதி அகிலா சிறிகுமார் (வவுனியா), திருமதி அமிர்தகலா சுதர்சன் (யாழ்ப்பாணம்) மற்றும் திருமதி ஜெயலோசனா சிவஞானசுந்தரம் (கொழும்பு) ஆகியோரும் இளைஞ்சைவப்புவர் பட்டத்தேர்வில் குணராசா பாபு (கல்முனை), செல்வி ராஜ்குமார் கனுஸ்சியா (வாழைச்சேனை), செல்வி சண்முகம் கிதுர்சனா (மட்டக்களப்பு), செல்வி ரவிக்குமார் குபேனிதர்ஷா (மட்டக்களப்பு) ஆகியோரும் சித்தியடைந்துள்ளனர்என்று அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் தெரியப்படுத்தியுள்ளது.



# கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் அலுவலக நிர்வாக உத்தியோகத்தருக்கு பிரியாவிடை

(பாறுக் ஷிஹான்)

கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தின் நிர்வாக உத்தியோகத்தராக கடமையாற்றி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி சேவையில் இருந்து ஓய்வு பெறும் மருதமுனை பகுதியை சேர்ந்த முஹம்மது ஹனீபா முஹம்மது றபீக் ஆகியோருக்கு விஷேட சேவை நலன் பாராட்டு விழா கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே.இப்னு அசாரின் தலைமையில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இவர் 1992.03.25 ஆந் திகதி தனது அரச சேவையில் இணைந்து கொண்டதுடன் இலங்கையில் பல பாகங்களில் கடமையாற்றி இறுதியாக கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் 2009.01.31 முதல் தற்போது வரை நிர்வாக உத்தியோகத்தராக கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் சம்மாந்துறை காரைதீவு சாய்ந்தமருது பெரிய நீலாவணை சவளக்கடை மத்தியமுகாம் பொறுப்பதிகாரிகள் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதான பொலிஸ் பரிசோதகருமான ஏ.எல்.ஏ. வாஹிட் கல்முனை தலைமையக பொலிஸ் மோட்டார் போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதான பொலிஸ் பரிசோதகருமான பி.ரி. நஸீர் மற்றும் பொலிஸ் பரிசோதகர்கள் உப பொலிஸ் பரிசோதகர்கள் பொலிஸ் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் ஓய்வு பெறும் நிர்வாக உத்தியோகத்தரின் குடும்ப உறுப்பினர்கள் கலந்து கொண்டதுடன் தமது சேவையின் அனுபவங்களையும் ஓய்வு பெறவுள்ள கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் பகிர்ந்து கொண்டனர்.









# சம்மாந்துறை பிரிவில் ஒக்டோபர் 15இல் பெரும்போக பயிர்ச்செய்கை ஆரம்பம்!



( வி.ரி. சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள சம்மாந்துறை புளக் 'ஜே' பிரிவுக்கு உட்பட்ட வயல்காணிகளில் பெரும்போக பயிர்ச் செய்கை எதிர்வரும் ஒக்டோபர் 15 ஆம் திகதி ஆரம்பிப்பது என்று தீர்மானிக்கப் பட்டுள்ளது.

சம்மாந்துறை புளொக் ஜே திட்ட முகாமைத்துவ பிரிவு விவசாய பிரதிநிதிகளின் ஆரம்ப முன்னோடிக் கூட்டம் நேற்று (29) திங்கட்கிழமை மாலை நடைபெற்றது.

சம்மாந்துறை பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் ராஜேந்திரா வேல்கஜன் தலைமையில் சம்மாந்துறை பங்களாவடி மண்டபத்தில் நடைபெற்றது.

அங்கு சம்மாந்துறை விவசாய குழு சம்மேளனத்தின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமு் தவிசாளருமான ஏ.எம்.எம். நௌசாட் மற்றும் திணைக்கள அதிகாரிகள் விவசாய பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

பெரும்போக பயிர்ச்செய்கை விதைப்புக் காலம் ஒக்ரோபர் 15 ஆம் திகதி தொடக்கம் நவம்பர் 10 ஆம் திகதி ஆகும் என்று தீர்மானிக்கப்பட்டது.

மூன்று மூன்றரை மாத நெல்லினம் பயிரிடப்பட வேண்டும். காப்புறுதிக் காலம் ஒக்டோபர் 15 ஆம் திகதி தொடக்கம் நவம்பர் 10 ஆம் திகதி வரைக்குமாகும்.

இந்த முறை பெரும்போகம் 15 ஆம் திகதி ஆரம்பமாகி அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி நிறைவடையும்.

இதற்கான நீர் விநியோகத்தை நீர்ப்பாசன திணைக்களம் வழங்க இருக்கின்றது .

விதைப்பு காலத்துக்கு முன்பதாக கால்நடைகளை அப்புறப்படுத்துவது முதல் பல விடயங்களும் கலந்துரையாடப்பட்டது.

அங்கு விவசாயிகள் மத்தியிலே திரவ உரம் தொடர்பாக பார்க் நிறுவனத்தின் பணிப்பாளர் இரத்தின சபாபதி பாஸ்கரன் தலைமையிலான குழுவினர் விளக்கம் அளித்தனர் .

சந்தைப்படுத்தல் முகாமையாளர் சம்பத் வித்யாரத்ன இந்தப் புதிய திரவ உர வகை தொடர்பாக விளக்கம் அளித்தார். ஒருங்கிணைப்பாளர் ஓய்வு நிலை பெரும்பாக உத்தியோகத்தர் மா. சிதம்பரநாதன் கலந்து கொண்டார்.





# கல்முனையில் எழுத்தறிவு தின ஊர்வலம்

(நூருல் ஹுதா உமர் )

கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் 'டிஜிட்டல் யுகத்தில் எழுத்தறிவை ஊக்குவித்தல்' எனும் தொனிப் பொருளில் சர்வதேச எழுத்தறிவு தின நடைபவனி நேற்று (29) கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம். எஸ். சஹுதுல் நஜீம் ஆரம்பித்து வைக்கப் பட்டது.

கல்முனை வலயக் கல்விப் பணிமனை முகாமைத்துவப் பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளரும், கல்முனை கோட்டக் கல்விப் பணிப்பாளருமான யூ.எல்.றியால் ஏற்பாட்டிலும், முறைசாராக் கல்விக்குப் பொறுப்பான எம்.எம்.சியாம் (வள வாளர்) அவர்களின் நெறிப்படுத்தலிலும் இன் நடைபவனி மேற்கொள்ளப்பட்டது.

இதில் கல்முனை வலயக் கல்விப் பணிமனை பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் வள வாளர்கள் , ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

அத்துடன் இந்த நடைபவனியில் பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

கல்முனை அல் – பஹ்றியா மகா வித்தியாலயத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட பவனியானது கல்முனை கடற்கரைப் பள்ளிவாயல் கரையோர வீதியினூடாகச் சென்று கல்முனை சாஹிறா தேசிய பாடசாலையை அடைந்தது. இவ்வூர்வலத்தில் கல்முனை வலயத்தைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட பத்துப் பாடசாலைகள் பங்குபற்றின.

இதில் மாணவர்களையும், பொது மக்களையும் விழிப்பூட்டும் வீதி நாடகங்களும் மாணவர்களால் முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.









# கரூர் துயரச் சம்பவம் குறித்து விஜய்யிடம் தொலைபேசியில் விசாரித்தார் ராகுல் காந்தி

கரூர் துயரச் சம்பவம் குறித்து த.வெ.க. தலைவர் விஜய்யை தொலைபேசியில் தொடர்பு கொண்டு ராகுல் காந்தி கேட்டறிந்தார்.

கரூரில் த.வெ.க. தலைவர் விஜய்யின் பிரசாரக் கூட்டத்தில் நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களது குடும்பத்தினருக்கு மத்திய அரசு சார்பில் தலா 2 லட்ச ரூபாவும், தமிழக அரசு சார்பில் தலா 10 லட்சம் ரூபாவும், நிவாரணம் அறிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு தலா 20 லட்சம் ரூபாவும், காயமடைந்தவர்களுக்கு தலா 2 லட்சம் ரூபாவும் வழங்கப்படுவதாக விஜய் அறிவித்துள்ளார்.

இந்நிலையில், மக்களவை எதிர்க்கட்சித் தலைவரும், காங்கிரஸ் மூத்த தலைவருமான ராகுல் காந்தி, விஜய்யை தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஆறுதல் கூறியுள்ளார். நெரிசல் ஏற்பட்டது குறித்தும் கேட்டறிந்தார். விஜய்யுடன் அவர் 15 நிமிடங்கள் பேசினார் என கூறப்படுகிறது.

பட்டினப்பாக்கம் சென்ற விஜய்

இதற்கிடையே, சென்னையில் உள்ள டி.ஜி.பி. அலுவலகத்துக்கு நேற்று முன்தினம் நள்ளிரவு வந்த மின்னஞ்சலில், விஜய் வீட்டுக்கு குண்டு மிரட்டல் விடுக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து, அவரது வீட்டில் மோப்ப நாய் உதவியுடன் பொலிஸார் சோதனை நடத்தினர். இதைத் தொடர்ந்து, விஜய் நேற்று காலை நீலாங்கரை வீட்டில் இருந்து காரில் புறப்பட்டு, பட்டினப்பாக்கம் வீட்டுக்கு சென்றார். இதனால், அங்கும் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.



# கரூர் நெரிசல் தொடர்பாக பொறுப்பற்ற செய்திகளை தவிர்க்குமாறு முதல்வர் ஸ்டாலின் வேண்டுகோள்

வேதனைக்குரிய கரூர் கூட்ட நெரிசல் சம்பவத்தில் பொறுப்பற்ற முறையில் வெளியிடப்படும் விஷமத்தனமான செய்திகளை தவிர்க்க வேண்டும் என்று முதல்வர் ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நெரிசல் ஏன் ஏற்பட்டது என்பது தொடர்பாக சமூக ஊடகங்களில் பல்வேறு கருத்துகள் பரப்பப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்து முதல்வர் ஸ்டா லின் ஒரு காணொலி வெளியிட்டுள்ளார். அதில் அவர் குறிப்பிடுகையில்,

“ரூரில் நடந்தது பெருந்துயரம், கொடுந்துயரம். இதுவரை நடக்காத துயரம், இனி, நடக்கக்கூடாத துயரம். மருத்துவமனையில் நான் பார்த்த காட்சிகள் இன்னும் கண்ணைவிட்டு அகலவில்லை. கனத்த மனநிலையிலும், துயரத்திலும்தான் இன்னும் இருக்கிறேன்.

இதற்கிடையே, சமூக ஊடகங்களில் சிலர் பரப்பும் வதந்திகள், பொய் செய்திகளை பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். எந்தவொரு அரசியல் கட்சித் தலைவரும் தன்னுடைய தொண்டர்களும், அப்பாவி பொதுமக்களும் உயிரிழப்பதை எப்போதும் விரும்ப மாட்டார்கள். இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் எந்த கட்சியை சார்ந்தவர்களாக இருந்தாலும், என்னை பொருத்தவரை அவர்கள் நம் தமிழ் உறவுகள். எனவே சோகமும், துயரமும் சூழ்ந்திருக்கும் இந்த நிலையில், பொறுப்பற்ற முறையில் வெளியிடப்படும் விஷமத்தனமான செய்திகளை தவிர்க்க வேண்டும். இனிவரும் காலங்களில் அரசியல் கட்சிகள், பொது அமைப்புகள் இது போன்ற நிகழ்ச்சிகளை நடத்தும்போது, எத்தகைய பொறுப்போடு நடந்து கொள்ள வேண்டும் என்ற விதிமுறைகளை வகுக்க வேண்டியது நம் எல்லோருடைய கடமை.” என்று குறிப்பிட்டுள்ளார்.



# விஜய் தாமதமாக வந்தமை உயிரிழப்புகளுக்கு காரணம்

## முதல் தகவல் அறிக்கையில் குற்றச்சாட்டு

த.வெ.க. நிர்வாகிகள் வேண்டுமென்றே திட்டமிட்டு விஜய் வருகையை 4 மணி நேரம் தாமதப்படுத்தினர். இதன் காரணமாகவே கரூரில் நெரிசல் ஏற்பட்டு உயிரிழப்பு நிகழ்ந்ததாக முதல் தகவல் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கரூரில் கடந்த 27 ஆம் திகதி த.வெ.க. தலைவர் விஜய் பிரச்சாரக் கூட்டத்தின்போது நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். 100 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இதுதொடர்பாக கரூர் நகர பொலிஸ் நிலைய ஆய்வாளர் மணிவண்ணன் வழக்கு பதிவு செய்துள்ளார்.

அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையில்,

கரூர் வேலுசாமிபுரத்தில் செப்ரெம்பர் 27 ஆம் திகதி விஜய் பிரச்சாரக் கூட்டத்துக்காக மத்திய மண்டல ஐ.ஜி., கரூர் எஸ்.பி. மேற்பார்வையில் 500 பேர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

விஜய் நண்பகல் 12 மணிக்கு கரூர் வரவுள்ளார் தகவல் பரவியதால், காலை 10 மணியில் இருந்தே வேலுசாமிபுரம் உள்ளிட்ட பகுதிகளில் தொண்டர்கள் குவியத் தொடங்கினர். 10 ஆயிரம் பேர்தான் வருவார்கள் என கரூர் மேற்கு மாவட்டச் செயலாளர் மதியழகன் விண்ணப்பத்தில் தெரிவித்த நிலையில், 25 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வந்தனர்.

இல்லாமல் 'ரோடு ஷோ' நடத்தி போக்குவரத்துக்கும், பொதுமக்களுக்கும் இடைஞ்சல் ஏற்படுத்தியதுடன், காலதாமதமும் செய்தார். முனியப்பன் கோயில் சந்திப்பில் தவறான திசையில், அதாவது வீதியின் வலதுபுறம் விஜய் உள்ளிட்டோரின் வாகனங்கள் சென்றன.

இரவு 7 மணிக்கு வேலுசாமிபுரம் சந்திப்பில் தொண்டர்களின் கூட்டத்துக்கு நடுவே வாகனத்தை நிறுத்தி, வேண்டுமென்றே காலதாமதம் செய்து, பொலிஸாரால் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு கூட்டம் அலைமோதச் செய்ததால், அசாதாரண சூழல் ஏற்பட்டது.

இதனால், மக்களுக்கு மூச்சுத் திணறல், கொடுங்காயம், உயிர்ச் சேதம் ஏற்படும் என்று மாவட்டச் செயலாளர் மதியழகன், பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த், இணைச் செயலாளர் நிர்மல் குமார் உள்ளிட்ட நிர்வாகிகளிடம் பலமுறை எச்சரித்தும், கேட்கவில்லை. அதிக கூட்டத்தை கூட்டி, அரசியல் பலத்தை பறைசாற்றும் நோக்கத்துடன் கட்சி நிர்வாகிகள் வேண்டுமென்றே திட்டமிட்டு விஜய், கரூருக்கு வருவதை 4 மணி நேரம் தாமதப்படுத்தினர். இதனால், அங்கு பல மணி நேரம் காத்திருந்த மக்கள் வெயிலிலும், தாகத்திலும் சோர்வடைந்தனர்.

வீதியோர தகரக் கொட்டகைகள், மரங்களில் தொண்டர்கள் ஏறி உட்கார்ந்ததால், சில இடங்களில் தகரக் கொட்டகை உடைந்தும், மரக்கிளைகள் முறிந்தும் விழுந்தன. இதனால், அதில் உட்கார்ந்திருந்தவர்கள், கீழே நின்றிருந்த மக்கள் மீது விழுந்தனர். இதனால், பலருக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டு மயங்கி விழுந்தனர். நெரிசலில் மிதிபட்டு, அப்பாவி மக்கள் உயிரிழந்தனர். இதுதொடர்பாக கரூர் நகரகாவல் நிலையத்தில் பி.என்.எஸ். பிரிவு, 223 மற்றும் தமிழக அரசின் பொதுச் சொத்து சேதப்படுத்துதல் சட்டப் பிரிவு 3 ஆகியபிரிவுகளில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையே த.வெ.க. கரூர் மேற்கு மாவட்டச் செயலாளர் மதியழகன் நேற்று இரவு கைது செய்யப்பட்டார். அவரிடம் பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர்.



# உலகின் உயரமான பாலம் சீனாவில் திறப்பு: 2 மணி நேரப் பயணம் 2 நிமிடத்தில் நிறைவு

உலகின் மிக உயரமான பாலம் சீன நாட்டில் திறக்கப்பட்டுள்ளது. இதனால் இதுவரை 2 மணி நேரமாக இருந்த பயணம் வெறும் 2 நிமிடங்களாக குறைந்துள்ளது.

சீனாவின் குய்சோ மாகாணத்தில் அமைக்கப்பட்டுள்ள பாலம் நேற்று அதிகாரப்பூர்வமாக திறக்கப்பட்டுள்ளது. இந்தப் பாலத்துக்கு ஹுவாஜியாங் கிராண்ட் கன்யான் பாலம் என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. தரைமட்டத்திலிருந்து 625 மீட்டர் உயரத்தில் இந்தப் பாலம் அமைந்துள்ளது.

இரு மலைகளை இணைக்கும் விதமாக இந்தப் பாலம் மிகவும் அழகுடனும், சிறப்பாகவும் அமைந்துள்ளது. இதுவரை இப்பகுதியைக் கடக்க 2 மணி நேரம் எடுத்துக்கொண்ட நிலையில் தற்போது பாலத்தின் உதவியால் இரண்டே நிமிடத்தில் இப்பகுதியைக் கடந்து விட முடியும்.

இதற்கு முன்பு பெய்பான்ஜியாங் பகுதியில் தரைமட்டத்திலிருந்து 565 மீட்டர் உயரத்தில் கட்டப்பட்டு இருந்த பாலமே உலகின் மிக உயரமான பாலமாக இருந்தது. தற்போது இந்த ஹுவாஜியாங் கிராண்ட் கன்யான் பாலம் 625 மீற்றர் உயரத்தில் அமைக்கப்பட்டு அந்த சாதனை முறியடிக்கப்பட்டுள்ளது. 2,900 மீற்றர் நீளம் கொண்ட இந்தப் பாலம் 3 ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து குய்சோ மாகாண போக்குவரத்து முதலீட்டு குழுமத்தின் திட்ட மேலாளர் வூ ஜாவோமிங் கூறும்போது,

“625 மீற்றர் உயரத்தில் அமைந்துள்ள இந்தப் பாலம் பொறியியலின் அற்புதமாக திகழ்கிறது.

இந்தப் பாலத்தை பொதுமக்கள் கண்டுகளிக்க வசதியாக 207 மீற்றர் உயரத்தில் லிப்ட் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் பாலத்தையொட்டி உணவகங்கள், பாலத்தை பொதுமக்கள் கண்டுகளிக்க ‘பிளாட்பாரங்கள்’ அமைக்கப்பட்டுள்ளன. இது மிக விரைவில் பிரபலமான சுற்றுலாத் தலமாக மாறி சுற்றுலாப் பயணிகளை வெகுவாக ஈர்க்கும்.” என்றார்.





# இஸ்ரேல் - காசா போர் விரைவில் முடிவுக்கு வரும்

## ட்ரம்ப் நம்பிக்கை

இஸ்ரேல் காசா போரை விரைவில் முடிவுக்குக் கொண்டு வர முடியும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

போர்நிறுத்தத்திற்காக, வகுக்கப்பட்ட 20 அம்ச அமைதி திட்டத்தை அறிவித்துள்ள நிலையில், அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், இது தொடர்பாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு இறுதி முடிவை அறிவிக்கவில்லை என சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவிற்கும், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பிற்கும் இடையிலான சந்திப்பொன்று வெள்ளை மாளிகையில் நடைபெற்றுள்ளது.

இதன்போது, போர் நிறுத்தம் தொடர்பாக, 20 அம்ச அமைதி திட்டத்தை ட்ரம்ப் அறிவித்துள்ளார்.



# தேவாலயத்தில் துப்பாக்கிச் சூடு

## நால்வர் பலி

அமெரிக்காவின் மிச்சிக்கன் தேவாலயத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 4 பேர் கொல்லப்பட்டதுடன், 9 பேர் காயமடைந்துள்ளனர்.

மேற்படி தேவாலயத்தில் நூற்றுக் கணக்கான மக்கள் ஆராதனையில் ஈடுபட்டிருந்த போது இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில், துப்பாக்கிச்சூடு நடத்திய சந்தேகநபர் சம்பவ இடத்திலேயே பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இதேவேளை, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் உத்தரவைத் தொடர்ந்து, அடுத்துவரும் இரண்டு மாதங்களுக்குள் போட்லண்டின், ஒரிகனில் தேசிய காவல்படை நிறுவப்படவுள்ளது.




சட்டவிரோத குடியேற்றவாசிகளின் வருகையைத் தடுப்பதற்காக அமைக்கப்பட்ட மையங்களுக்கு எதிராக நடத்தப்படும் போராட்டங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில், இராணுவத்தினர் ஒரிகனுக்கு அனுப்பப்படவுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி முன்னதாக அறிவித்திருந்தார்.



கனடா முரசு

செவ்வாய்க்கிழமை 30/09/2025

மில்டன் வாகன விபத்தில் ஒருவரின் உயிரிழப்பு



03



# கனடாவில் 'பிஷ்னோய் கும்பல்' பயங்கரவாத அமைப்பாக அறிவிப்பு

இந்தியாவைத் தளமாகக் கொண்ட பிஷ்னோய் கும்பல், ஓர் பயங்கரவாத அமைப்பு என கனடிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

கனடாவில் சீக்கியத் தலைவர்களை அச்சுறுத்தி, வன்முறைகளை திட்டமிட்டதாக குற்றம் சாட்டப்பட்ட நிலையில், இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பு பாதுகாப்பு, உளவுத்துறை மற்றும் காவல்துறை நடவடிக்கைகளுக்கு வலுசேர்க்கும் என கனடா பொது பாதுகாப்பு அமைச்சர் கரி ஆனந்தசங்கரி கூறியுள்ளார்.

02

# காய்ச்சல் தடுப்பூசி ஏற்றுகை தொடர்பில் கனேடிய அரசாங்கம் விசேட அறிவுறுத்தல்

காய்ச்சல் தடுப்பூசி ஏற்றுகை தொடர்பில் கனடிய அரசாங்கம் விசேட அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

ஒன்டாரியோ மாகாணத்தில் மூத்த குடிமக்கள், நீண்டகால பராமரிப்பு இல்லங்களில் வசிப்பவர்கள், மருத்துவமனை பணியாளர்கள் மற்றும் நோயாளிகளுக்கு இந்த வாரம் முதல் காய்ச்சல் தடுப்பூசி செலுத்தப்பட உள்ளது.

எதிர்வரும் ஒக்டோபர் 27 முதல், ஆறு மாதங்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய ஒன்டாரியோ மாநில மக்கள் அனைவருக்கும் தடுப்பூசி கிடைக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மற்ற கனடிய மாகாணங்கள் மற்றும் பிரதேசங்களில்

02





# கனேடிய மூதாட்டி பிறந்தநாளை வித்தியாசமாக கொண்டாடினார்

கனடாவின் கட்டினோ நகரத்தைச் சேர்ந்த லிண்டா வுட், தனது 75 ஆவது பிறந்தநாளை சாதாரணமாகக் கொண்டாடவில்லை.

மாறாக, 12,000 அடி உயரத்தில் விமானத்தின் வாசலில் அமர்ந்து, வானில் பறந்து குதிக்கும் ஸ்கை டைவிங் கனவை நிறைவேற்றினார்.

தாம் 70 ஆவது பிறந்தநாளிலேயே இதைச் செய்ய நினைத்ததாகவும், கொவிட் பெருந்தொற்று காரணமாக அது சாத்தியமாகவில்லை எனவும் வுட் கூறியுள்ளார்.

இந்த குதிப்பு வெறும் சாகசத்திற்காக மட்டும் அல்ல எனவும் கடந்த 12 ஆண்டுகளாக தன்னார்வலராகச் செயல்பட்டு வரும் ஹொஸ்பிஸ் கெயார் ஒட்டாவா அமைப்பிற்காக நிதி திரட்டுவதற்கும் இதை செய்ததாகவும் தெரிவித்துள்ளார்.

இதுவரை 7,000 இற்கும் மேற்பட்ட நன்கொடை திரட்டியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

## காய்ச்சல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒக்டோபர் நடுப்பகுதியில் இருந்து காய்ச்சல் தடுப்பூசி திட்டங்கள் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சிறிய குழந்தைகள், மூத்தவர்கள், ஆஸ்துமா மற்றும் COPD (chronic obstructive pulmonary disease) உடையோர் அதிக ஆபத்தில் உள்ளனர் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

தடுப்பூசி காய்ச்சலை முற்றிலும் தடுப்பதில்லை, ஆனால் தொற்றை லேசாக ஆக்கி மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதைத் தடுக்க உதவுகிறது என அறிவுறுத்தியுள்ளனர்.

தடுப்பூசி போட்ட 2 வாரங்களுக்கு பிறகே பாதுகாப்பு விளைவுகள் உருவாகும் என தெரிவித்துள்ளனர்.

இந்த காய்ச்சல் தடுப்பூசி, மருத்துவரை அணுக வேண்டிய நிலை அல்லது மருத்துவமனை அனுமதிக்கப்பட வேண்டிய நிலையை சுமார் 50 வீதத்தினால் குறைக்கும் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிஷ்னோய் கும்பல் கொலை, துப்பாக்கிச் சூடு, தீவைத்தல் உள்ளிட்ட குற்றங்களில் ஈடுபடுகிறது. மிரட்டல் மற்றும் பிணையம் மூலம் சமூகத்தில் பயத்தை உருவாக்குகிறது.

முக்கிய சமூக தலைவர்கள், வணிகர்கள், கலாச்சார நபர்கள் குறிவைக்கப்படுகின்றனர் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

லாரன்ஸ் பிஷ்னோய் தலைமையிலான இந்த கும்பல், இந்திய சிறையில் இருந்தபடியே தனது குற்றச்செயல்களை ஒருங்கிணைத்ததாக கூறப்படுகிறது.

கும்பலின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படலாம், வங்கி கணக்குகள் முடக்கப்படலாம் எனவும் கனடாவில் இருந்து யாரும் கும்பலுக்கு நிதி அல்லது உதவி வழங்குவதைத் தடை செய்யப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.




# மில்டன் வாகன விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

கனடாவின் மில்டன் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து லோவர் பேஸ் லைன் வீதியில் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிவப்பு நிற போர்ட் பிக்கப் வாகனமொன்று கிழக்கு திசையில் சென்று கொண்டிருந்தபோது சாலையை விட்டு விலகி கான்கிரீட் சுவரில் மோதியுள்ளது.

வாகனத்தில் பயணம் செய்த ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் வேறு எந்த வாகனமும் சம்பந்தப்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்து விசாரணை பிரிவு சம்பவ இடத்திற்கு வந்து ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது.



# கனடாவில் நவம்பர் மாதத்தில் அறிமுகமாகும் நேர மாற்றம்

கனடாவில் இவ்வருடம் நவம்பர் மாதம் 2 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை அதிகாலை 2.00 மணிக்கு பகல்நேர சேமிப்பு நேரம் முடிவடைகிறது.

இதன்படி, கடிகாரங்கள் ஒரு மணி நேரம் பின்னோக்கி மாற்றப்பட்டு மீண்டும் வழமையான நேரத்திற்கு மாற்றப்பட உள்ளது. இதன் மூலம் கனடியர்கள் அந்த இரவில் கூடுதலாக ஒரு மணி நேரம் தூங்கும் வாய்ப்பைப் பெறுவார்கள்.

எனினும், இலையுதிர் காலம் முடிந்து குளிர்காலம் நெருங்கும் நிலையில், நாட்கள் குறுகியதாக உணரப்படுவதைப்போல, சூரிய உதயம் முன்னதாகவும் சூரிய அஸ்தமனம் விரைவாகவும் நிகழும் என்பது குறிப்பிடத்தக்கது.

வசந்தகாலத்தில் (மார்ச் மாதம்), பகல் நேர சேமிப்பு நேரமாற்றம் மீண்டும் அமலுக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அப்போது கடிகாரங்கள் ஒரு மணி நேரம் முன்னோக்கி மாற்றப்படுவதால், கனடியர்கள் அந்த இரவில் ஒரு மணி நேர தூக்கத்தை இழக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பெரும்பாலான பகுதிகளில் இந்த நேர மாற்றம் நடைமுறையில் இருந்தாலும், ஒவ்வொரு மாநகராட்சியும் தனித்து முடிவு செய்யும் அதிகாரம் பெற்றுள்ளது.பிரிட்டிஷ் கொலம்பியாவின் சில பகுதிகளில் நேர மாற்றத்தை பின் பற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.